உண்மையை உரைத்திடு!

பொது வாழ்வு புனிதமான பூமி. அந்தத் தியாக பூமியில் உலவுபவர்கள், புகழுக்காகப் புளுகு மொழி பேசும் புலவர்களாக இருக்கக் கூடாது. ஊர் முழுதும் எதிர்த்தாலும், உண்மையையே உரைத்திடும் அஞ்சா நெஞ்சர்களாக இருக்க வேண்டும்; ஆற்றல் வீரர்களாகத் திகழ வேண்டும்.

- அண்ணா

அண்ணா சொன்ன அரசியல் பாடம்!

Dear Brother, Go to the people ; Live with them, Learn from them, Love them, Serve them, Plan with them, Start with what they have.

மக்களிடம் செல், அவர்களோடு வாழ், அவர்களிடம் கற்றுக் கொள், அவர்களை நேசி, அவர்களுக்குச் சேவை செய், அவர்களோடு திட்டமிடு, அவர்களுக்குத் தெரிந்ததிலிருந்து தொடங்கு, அவர்களிடம் இருப்பதைக் கொண்டு கட்டி எழுப்பு !

- அண்ணா

அமெரிக்காவில் 7,618 கோடி ரூபாய் முதலீடுகளை ஈர்த்து சென்னை திரும்பிய

முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழகத்தினர் உற்சாக வரவேற்பு!

அமைச்சர் தா.மோ.அன்பரசன் தலைமையில் திரண்டனர்!

சென்னை, செப்.15-

அமெரிக்காவில் 7,618 கோடிரூபாய் முதலீடுகளை ஈர்த்து சென்னை திரும்பிய கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு சென்னை மீனம்பாக்கம் விமான நிலையம் முன்பு ஜி.எஸ்.டி.சாலையில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழகத்தினர் மாவட்ட செயலாளர் அமைச்சர் தா.மோ.அன்பரசன் தலைமையில் ஆயிரக்கணக்கானோர்எழுச்சியுடன் கழக கொடிகளையும், வரவேற்பு பதாகைகளையும் ஏந்தி திரண்டு நின்று பாண்ட் வாத்தியம், மேள தாளம் முழங்க உற்சாக வரவேற்பு அளித்தனர்.

வருகிற 2030ஆம் ஆண்டிற்குள் தமிழ்நாட்டின் பொருளாதாரத்தை 1 டிரில்லியன்டாலர் என்ற உயரிய இலக்கினை அடைய, அல்லும் பகலும் அயராது பாடுபட்டு வரும் முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொழில் முதலீடுகளை ஈர்ப்பதற்காக அமெரிக்க நாட்டிற்கு சென்றார்.

அமெரிக்காவில் உள்ள சான்பிரான்சிஸ்கோ, சிகாகோவில், உள்ள உலகின் 17 முன்னணி தொழில் நிறுவனங்களுடன் 7618 கோடி ரூபாய் தொழில் முதலீட்டிற்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்களை தமிழ்நாடு முதல்வர் அவர்களின் முன்னிலையில் போடப்பட்டன.

பல்வேறு முன்னணி தொழில் நிறுவனங்களில் தமிழ்நாட்டில் புதிய தொழில் நிறுவனங்களை தொடங்கவும், தற்போது உள்ள தங்களது தொழில் நிறுவனங்களை விரிவாக்கம் செய்திடுவதற்கான தொழில் புரிந்துணர்வு ஒப்பந்தங்களை நிறைவேற்றி விட்டு நேற்று காலை 8.00 மணியளவில் சென்னை விமான நிலையத்தை வந்தடைந்தார்.

சென்னை மீனம்பாக்கம் விமான நிலையம் முன்பு ஜி.எஸ்.டி. நெடுஞ்சாலையில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மாவட்ட செயலாளர் - அமைச்சர் தா.மோ.அன்பரசன் தலைமையில் ஆயிரக்கணக்கான கழகத்தினர் தமது கரங்களில் கழக கொடியையும், வரவேற்பு பதாகைகளை மகிழ்ச்சியுடன் ஏந்தி திரண்டுநின்று பாண்ட்வாத்தியம், மேள தாளம் முழங்க உற்சாக வரவேற்பு அளித்தனர்.

கழகக் கொடிகள்

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை வரவேற்று ஜி.எஸ்.டி. நெடுஞ்சாலை நெடுகிலும் ஆலந்தூர் வரை 3 கி.மீ. தூரத்திற்கு கழக கொடிகள் பறந்தது பார்க்க கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது.

கார் மூலம் விமான நிலையத்தில் இருந்து வெளியே வந்த முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு அமைச்சர் தா.மோஅன்பரசன் பொன்னாடை அணிவித்து மகிழ்ச்சியுடன் வரவேற்றார்.

அவரைத் தொடர்ந்து காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி, காஞ்சிபுரம் மாவட்ட ஊராட்சித் தலைவர் படப்பை ஆ.மனோகரன், தாம்பரம் மாநகராட்சி துணை மேயர் ஜி.காமராஜ், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் வீ.தமிழ்மணி, து.மூர்த்தி, எல்.இதயவர்மன்,

மாவட்ட கழகப் பொருளாளர் மாமல்லபுரம் வெ.விசுவநாதன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ஜி.சி.அன்புச்செழியன், க.அன்புச்செல்வன், ஆதிமாறன்,

ஒன்றியச் செயலாளர்கள் ந.கோபால், எஸ்.டி.கருணாநிதி, பையனூர் எம்.சேகர், ஏ.வந்தேமாதரம், ஜி.கே.விவேகானந்தன் (எ) ரவி, எம்.டி.லோகநாதன்,

நகரச் செயலாளர்கள் டி.பாபு, எஸ்.ஜபருல்லா, எஸ்.நரேந்திரன், ஜெ.சண்முகம், கோ.சத்தியமூர்த்தி, எம்.கே.டி.கார்த்திக், பேரூர் செயலாளர்கள் மு.தேவராஜ், ஜி.டி.யுவராஜ், ஆர்.சதீஷ்குமார்,பகுதி செயலாளர்கள் என்.சந்திரன், பி.குணாளன், வே.கருணாநிதி, இ.ஜோசப் அண்ணாதுரை, த.ஜெயக்குமார், எஸ்.சேகர், ஏ.கே.கருணாகரன், இ.எஸ்.பெர்னாட், இரா.சுரேஷ்,

பேரூர் செயலாளர்கள் மு.தேவராஜ், ஜி.டி.யுவராஜ், ஆர்.சதீஷ்குமார், தலைமைப் பொதுக்குழு உறுப்பினர்கள் ஆர்.டி.பூபாலன், எஸ்.சதீஷ், ஆர்.எஸ்.சங்கர், க.தேவேந்திரன், கே.எத்திராஜ், எம்.செல்வகுமார், மா.கணேஷ்பாபு, செ.அருள்தேவிஇரா.பாஸ்கரன், மு.ரஞ்சன், தாம்பரம் மாநகர துணைச் செயலாளர் பொன்.சதாசிவம், மாநகரப் பொருளாளர் வ.விஜயரங்கன்,

காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கோல்டு டி.பிரகாஷ், மாவட்ட துணை அமைப்பாளர்கள் வீ.விஜயகுமார், டி.கே.கமலக்கண்ணன், பா.ராமமூர்த்தி, கே.மணிகண்டன், கோ.ஜானகிராமன், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் எல்.பிரபு, மாவட்ட துணை அமைப்பாளர் கலாநிதி குணாளன், விக்னேஸ்வரன், ஜெகதீப், சங்கீதா

மாவட்டக் கழக அணிகளின் அமைப்பாளர்கள் உதயா கருணாகரன், ச.சசிகலா, எஸ்.கே.நெப்போலியன், ஆர்.ஆர்.ஜெயராம் மார்த்தாண்டன், எஸ்.ஆல்பர்ட், ஆர்.கோவிந்தன், த.வினோத்குமார், மருத்துவர் டி.பி.செந்தில்குமார், பொன்.ரமேஷ் கவி, டி.எஸ்.எம்.ஜெயகரன், எஸ்.கர்ணன், ஜான் தினகரன், டி.ஆர்.சாரதி பெரியநாயகம், தாம்பரம் மாநகர இளைஞர்அணிஅமைப்பாளர் சத்திய பிரபு,

விண்ணதிர முழக்கம்!

மாநகர துணை அமைப்பாளர்கள் எஸ்.பிரபு கார்த்தி, சிவ சுப்பிரமணியன், ராகேஷ் மற்றும் தாம்பரம் மாநகர வட்டக் கழகச் செயலாளர்கள் - நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உள்ளிட்ட கழகத்தினர் 6 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கழகத்தினர் சாலைத் தடுப்புக்குப் பின்னால் நீண்ட வரிசையில் திரண்டுநின்று முதல்வருக்கு தங்களை கைகளை அசைத்து மகிழ்ச்சி ஆரவாரத்துடன் தளபதி வாழ்க! முதல்வர் வாழ்க! என்ற முழுக்கங்களை விண்ணதிர முழக்கமிட்டு மகிழ்ச்சியுடன் வரவேற்றனர்.

முதல்வரை வரவேற்று மீனம்பாக்கம் விமான நிலையம் முன்பு ஆலந்தூர் கத்திப்பாரா மேம்பாலம் வரை 5 இடங்களில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் பிரம்மாண்டமான வரவேற்பு பதாகைகள் வைக்கப்பட்டிருந்தன.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழகத்தினர், ஜி.எஸ்.டி. சாலை பிளாட்பாரம் தடுப்புக்கு உள்ளே நீண்ட வரிசையில் தமது கரங்களில் கழக கொடிகளையும், வரவேற்பு பதாகைகளை ஏந்தி வரவேற்பு அளித்ததை பார்வையிடும் வகையில் முதல்வரின் கார் மெதுவாக ஊர்ந்து சென்றது.

முதல்வருடன் மகிழ்ச்சியுடன் சாலையோரம் வரிசையாக நின்றிருந்த கழகத் தோழர்களுக்கு கையசைத்து வணக்கம் தெரிவித்தார்.

மொத்தத்தில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழகத்தினர் முதல்வர் அவர்களுக்கு அளித்த எழுச்சிமிகு வரவேற்பு மிக பிரமாண்டமான வரவேற்பாக அமைந்தது.

கழக முப்பெரும் விழா - பவள விழாவை முன்னிட்டு

மயிலை மேற்கு பகுதி சார்பில் கழகக் கொடியேற்றி இனிப்பு வழங்கல்!

பகுதிச் செயலாளர் நந்தனம் கி.மதி அறிக்கை!

சென்னை, செப்.15-

சென்னை தென்மேற்கு மாவட்டம், மயிலை மேற்கு பகுதி தி.மு.க சார்பில் இன்று (15.09.2024 - ஞாயிறு) காலை 8.00 மணியளவில் முதலமைச்சர் - கழகத்தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க முப்பெரும் விழா, கழக பவள விழாவை முன்னிட்டு சென்னை தென்மேற்கு மாவட்டக் கழகத்தின் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. ஆலோசனையின்படி மயிலை மேற்கு பகுதி செயலாளர் நந்தனம் கி.மதி எம்.சி. தலைமையில் பகுதி நிர்வாகிகள் ஜி.ஆர். இராஜேந்திரன், ஆர்.எல்.வி.அசோக் குமார், அகல்யா விஸ்வநாதன், ப.பாக்கியதாஸ், ஜி.முருகையன் வட்டக் கழகத்தின் செயலாளர்கள் டி.இராஜவேலு, சீ.கிருஷ்ணமூர்த்தி, எஸ்.ஆர்.ராஜா சுரேஷ்குமார், ஆ.நாகராஜன், மு.இ.ஏழுமலை, மூ.இராஜேந்திரன் ஆகியோர் முன்னிலையில் 121 வட்டத்தில் 12 இடத்தில், 121 'அ' வட்டத்தில் 15 இடத்தில், 122 வட்டத்தில் 20 இடத்தில், 122 'அ' வட்டத்தில் 13 இடத்தில், 123 வட்டத்தில் 29 இடத்தில், 123 'அ' வட்டத்தில் 22 இடத்தில் வட்டக்கழகத்திலுள்ள கழக முன்னோடிகள் கழகக் கொடிகளை ஏற்றி இனிப்பு வழங்குகின்றனர்.

கொடியேற்று விழாவில் மாவட்ட, பகுதி, வட்ட நிர்வாகிகள் அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழகத் தோழர்கள் கலந்து கொண்டு விழாவை சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு பகுதிச் செயலாளர் நந்தனம் கி.மதி அறிக்கை விடுத்துள்ளார்.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் திருப்பெரும்புதூர் வடக்கு ஒன்றிய தி.மு.க. பொது உறுப்பினர்கள் கூட்டம் ஒன்றியக் கழகச் செயலாளர் எஸ்.டி.கருணாநிதி தலைமையில் ஜெ.சிவபாதம் வரவேற்புரையில் பி.கலைமோகன், தி.பிரபாகரன், நளினா சின்ன கண்ணு, மா.மணிவண்ணன், ச.வேலுமணி, ஏ.நாசர், இ.முனிகிருஷ்ணன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் தா.மோ.அன்பரசன் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார். இதில் த.துரைசாமி, ஆ.மனோகரன், அ.தமிழ்மாறன், நா.கோபால், இரா.சதீஷ்குமார், மா.கணேஷ் பாபு, ப.இராமமூர்த்தி, மாலதி போஸ்கோ, சாந்தி சதீஷ்குமார், பி.ரவி, இரா.பிரகாசம், நா.சத்யா, ஏ.முரளிதரன், இரா.வெங்கடேசன், எஸ்.டி.கே.சபரி ராஜா, ஜி.எஸ்.குமார், இந்திராணி சுப்பிரமணி, ஜா.செந்தில் தேவராஜ், கு.ப.முருகன், எல்.டி.ஜார்ஜ், கோ.விநாயகமூர்த்தி, த.தணிகாசலம், இரா.அருள் பாரத், க.முருகன், ச.தேவேந்திர பாபு, ஏ.டோம்னிக், பா.முத்துகுமாரசாமி, எ.ஹரி கிருஷ்ணன், ஜா.முனிரத்தினம், ஓவிய முருகன், ஹேமாவதி விமல், உஷா கோதண்டம், கே.ஆண்டனி வினோத்குமார், மல்லிகா ரவிச்சந்திரன், கோமதி கணேஷ் பாபு, ப.பரமசிவம் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர். ஒன்றிய வடக்கு இளைஞர் அணி அமைப்பாளர் பாலா (எ) பால்ராஜ் நன்றி கூறினார்.

பி.எஸ். சந்துரு ஏற்பாட்டில் - புழல் எம்.நாராயணன் முன்னிலையில்

மாதவரம் வடக்கு பகுதி 23வது வட்ட பொது உறுப்பினர்கள் கூட்டம்!

மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. ஆலோசனைகள் வழங்கினார்!

மாதவரம், செப்.15-

சென்னை வடகிழக்கு மாவட்டம், மாதவரம் வடக்கு பகுதி, 23 வது வட்ட பொது உறுப்பினர்கள் கூட்டம் புழல் ஜிஎன்டி சாலை, காவாங்கரை பகுதியில் அமைந்துள்ள ஐ.டி. மஹால் அரங்கில் நடைபெற்றது.

23-வது வட்டச் செயலாளர் பி.எஸ்.சந்துரு ஏற்பாட்டில், மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம்.நாராயணன் முன்னிலையில் நடைபெற்ற கூட்டத்தில், சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. கலந்துகொண்டு ஆலோசனை வழங்கினார்.

23-வது வட்ட அவை தலைவர் து.எழில் குமார் வரவேற்றார்.

முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் ஆணைப்படி, 23-வது வட்டத்தில் நடைபெற்ற பொது உறுப்பினர்கள் கூட்டத்தில் வட்டக் கழக நிர்வாகிகள், பகுதி கழக நிர்வாகிகள், அணிகள் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பொது உறுப்பினர்கள் என பலர் கலந்து கொண்டார்கள்.

இக்கூட்டத்தில் சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு முப்பெரும் விழா மற்றும் கழக ஆக்கப் பணிகள் குறித்து ஆலோசனைகளை வழங்கினார். பின் பொது உறுப்பினர்கள் அனைவருக்கும் அறுசுவை உணவு வழங்கப்பட்டது.

வட்டக் கழக நிர்வாகிகள் வக்கீல் டி.ராஜாராம், சொ. சரவணன், மேக்சிலா உதயகுமார், க.சிவகுமார், டி.நெல்சன் ராஜ், எஸ்.முத்துவேல், க.ந.க.சைமன், வே.ரவி ஆகியோருடன்,

பொதுக்குழு உறுப்பினர் என்.பரந்தாமன், மாவட்ட மருத்துவர் அணி துணை அமைப்பாளர் எஸ்.குணசேகரன், மாவட்ட அயலக அணி துணை அமைப்பாளர் எச். பீர்முகமது, மாவட்ட மகளிர் அணி துணை அமைப்பாளர் சுதா, பகுதி கழக நிர்வாகிகள் கே.சிவ சங்கரன், நா.மோகன் குமார் நாகூரார், வி.திராவிட வீரன், 16வது வட்டச் செயலாளர் இ. கண்ணப்பன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள்.

இக்கூட்டத்தில் முதலமைச்சர் கழக தலைவர் ஆணைப்படி, முப்பெரும் விழாவை சிறப்பாக நடத்துவது எனவும், வீடுகள் தோறும் கழக கொடி ஏற்றி கழக பவள விழாவை கொண்டாடுவது எனவும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

முன்னதாக அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த முத்தமிழ் அறிஞர் கலைஞரின் திருவுருவப்படத்திற்கு மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ., பகுதி செயலாளர் புழல் எம்.நாராயணன், வட்டச் செயலாளர் பி.எஸ்.சந்துரு உள்ளிட்ட நிர்வாகிகள் மலர் தூவி அஞ்சலி செலுத்தினார்கள்.

கூட்டத்தின் முடிவில் வட்டத் துணைச் செயலாளர் எம். விக்னேஸ்வரன் நன்றி கூறினார்.

நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டை 23வது வட்டச் செயலாளர் பி.எஸ்.சந்துரு செய்து இருந்தார்.

எஸ்.முரளி தலைமை! நந்தனம் கி.மதி முன்னிலை! தமிழச்சி தங்கபாண்டியன் பங்கேற்பு!

மயிலை கிழக்கு பகுதியில் தி.மு.க. பவள விழா! கழகத் தோழர்களின் குடும்ப விழா!

கழக மூத்த முன்னோடிகளுடன் கொடி ஏற்றி மயிலை த.வேலு பொற்கிழி வழங்குகிறார்!

சென்னை, செப் 15-

சென்னை தென்மேற்கு மாவட்டம் மயிலை கிழக்கு பகுதி தி.மு.க சார்பில் திமுக பவள விழா கழகத் தோழர்களின் குடும்ப விழா ஒருங்கிணைந்த மயிலை பகுதி கழகத்தில் நாற்பது ஆண்டுகளாக கழகக் வளர்த்த கழக முன்னோடிகள் மா.பால கிருஷ்ணன் (முன்னாள் வட்ட செயலாளர்), இ.கணேசன் (முன்னாள் வட்ட செயலாளர்), திருமதி.கோமதிமனோகரன் (முன்னாள் மாமன்ற உறுப்பினர்), கயிலை அன்பழகன் (முன்னாள் கழக நிர்வாகி இலக்கிய அணி) ஆகியோரால் 75ஆம் ஆண்டு கழகக்கொடியினை ஏற்றும் தொடக்க விழா இன்று (15.09.2024 -ஞாயிற்றுக்கிழமை) காலை 8.00 மணியளவில் 124 அ வட்டம், மயிலாப்பூர் இந்தியன் வங்கி அருகில் நடைபெறுகிறது.

மயிலை கிழக்கு பகுதி செயலாளர் எஸ்.முரளி தலைமை வகிக்கிறார்.

மயிலை மேற்கு பகுதி செயலாளர் நந்தனம் கி.மதி எம்.சி., எஸ்.முனுசாமி, பி.தாஸ், ஏ.குமாரி, எல்.உதயகுமார், ஏ.தாஸ், அ.தவநேசன், வி.வெற்றிவேல், கோ.கண்ணன், துரைபார்த்திபன், பா.பொன்னுசாமி, விமலாகிருஷ்ணமூர்த்தி எம்.சி., கீதாமுரளி எம்.சி., அ.ரேவதி எம்.சி. ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

124 அ வட்ட பொறுப்பாளர் மா.பா.அன்பு வரவேற்கிறார்.

சென்னை தென்மேற்கு மாவட்ட கழக செயலாளர் மயிலாப்பூர் சட்ட மன்ற உறுப்பினர் மயிலைத.வேலு எம்.எல்.ஏ., தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி. ஆகியோர் கழக மூத்த முன்னோடிகளுடன் கொடி ஏற்றி பொற்கழி வழங்குகின்றனர்.

இக்கூட்டத்திற்கு மாநில மாவட்ட நிர்வாகிகள் எஸ்.மோகன், சுக்தாம்நம்பிராஜன், மு.தம்பிதுரை, சி.தசரதன், டாக்டர் ஜெ.அருண், டாக்டர் கலைகதிரவன், ஆ.சந்திரசேகர், நந்தனம் வேதா, மூ.சத்யா, கே.மலர், என்.அன்பழகன், கோ.சுமணி, செல்விசௌந்தரராஜன், மந்தைவெளி, அ.பாபு, யோகேஷ்ரவி, வேலுசம்பந்தம், எம்.ஆறுமுகம், அ.வாசுதேவன், ஜெ.ஜானகிராமன், ஜி.டி.அம்பேத்கார்,

மயிலை மேற்கு பகுதி கழக நிர்வாகிகள் ஜி.ஆர். இராஜேந்திரன், ஆர்.எல்.வி.அசோக்குமார், பா.பாக்கியதாஸ், அகல்யாவிஸ்வநாதன், ஜி.முருகையன், மயிலை பகுதி வட்டசெயலாளர்கள் டி.ராஜவேலு, சீ.கிருஷ்ணமூர்த்தி, எஸ்.ஆர்.ராஜாசுரேஷ்குமார், அ.நாகராஜன், மு.இ.ஏழுமலை, மூ.இராஜேந்திரன், அனைத்து அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் ராஜா அன்பழகன், எஸ்.சரவணன், எஸ்.பானுசலீம், விஜய்வெங்கடேசன், ஆர்.கதிரவன், மயிலை ஆர்.பாலு, என்.வடிவேல், மோனிஷா, சி.கணேஷ்பாண்டியன், ம.ஆனந்தன், மோசஸ், ச.சண்முகநாதன், சாந்தோம் ஆ.அந்தோணி, ஜெ.ஜெகன்ரால், ஆர்.குமரன், ஏ.சத்தியமூர்த்தி, டாக்டர் கோ.சக்தி விக்னேஷ், என்.எஸ்.பாலசுப்பிரமணி மற்றும் பகுதி, வட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், வட்ட நிர்வாகிகள், பாக முகவர்கள், கழக உடன்பிறப்புக்கள் அனைவரையும் வருக! வருக!! என அன்புடன் வரவேற்கின்றோம்.

நன்றியுரையை மூ.உதயசூரியன், சா.ராஜீ, தா.வின்சென்ட், ம.ஜெயகோபி, பி.ரமேஷ், ஆர்.கலைசேகரன், டி.மோகன்ராஜ், த.விக்னேஸ்வரன், ஸ்டோர் வீ.அருண்குமார், தா.தீபன் டி.ஜெகதீஷ்பாபு கூறுகின்றனர்.

காஞ்சிபுரம் மாவட்டம் ஆலந்தூர் தெற்கு பகுதியில் 6 வார்டுகளில்

பேரறிஞர் அண்ணா பிறந்தநாள் விழா! உணவு - கொடியேற்றம்!

ஆலந்தூர் தெற்கு பகுதி செயலாளர் என்.சந்திரன் அறிக்கை!

சென்னை, செப்.15

ஆலந்தூர் தெற்கு பகுதி கழக செயலாளர் 12வது மண்டலகுழுதலைவர் என்.சந்திரன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

குறு சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் துறை அமைச்சரும், காஞ்சி வடக்கு மாவட்ட கழக செயலாளருமான தா.மோ. அன்பரசன் அறிவுறுத்தலின்படி, பேரறிஞர் பெருந்தகை அறிஞர் அண்ணா அவர்களின் 116 வது பிறந்த நாளை முன்னிட்டு 162வது வார்டு தில்லை கங்கா நகர் அண்ணாசிலை,163வது வார்டு அம்பேத்கர் திடல்அருகில், 164வதுவார்டுநேருகாலனி மெயின் ரோடு,165வதுவார்டு பாலஜிநகர்மெயின் ரோடு,166நேருநெடுஞ்சாலை அண்ணாசிலை அருகில்,அந்தந்த வார்டுகளிலும் இன்று 15.09.2024 காலை 7 மணி அளவில் 167வது வார்டில் எம்.ஜி.ஆர். ரோடு ஸ்டேட் பாங்க் காலணியில் அமைந்துள்ள பேரறிஞர் அண்ணாதிருவருவசிலைக்கு அருகில் உள்ள கொடிக்கம்பத்தில் கழக கொடியேற்றி, அண்ணாதிருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து, இனிப்புகள் வழங்கி, காலை சிற்றுண்டி வழங்க இருக்கிறது.

எனவே ஆலந்தூர் தெற்கு பகுதிக்கு உட்பட்ட பொதுக்குழு உறுப்பினர், மாவட்ட அணிகளின் நிர்வாகிகள், பகுதி நிர்வாகிகள், வட்ட கழக செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், மாவட்ட பிரதிநிதிகள், பகுதி பிரதிநிதிகள், வட்ட நிர்வாகிகள், பகுதி, வட்ட அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், மற்றும் துணை அமைப்பாளர்கள், இளைஞர் அணியினர், மாணவர் அணியினர், மகளிர் அணியினர், மற்றும் கழகத் தோழர்கள், மூத்த கழக முன்னோடிகள், அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு 12வது மண்டல குழு தலைவர், ஆலந்தூர் தெற்கு பகுதி கழக செயலாளர் என். சந்திரன் தெரிவித்துள்ளார்.

மாதவரம் வடக்கு பகுதி 23வது வட்ட பொது உறுப்பினர்கள் கூட்டம் வட்டச் செயலாளர் பி. எஸ். சந்துரு ஏற்பாட்டில், மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் முன்னிலையில் காவாங்கரை ஐடி மஹாலில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம் எல் ஏ கலந்து கொண்டு ஆலோசனைகளை வழங்கிய போது எடுத்த படம். உடன் மாவட்ட, பகுதி, வட்ட கழக நிர்வாகிகள், அணிகள் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பொது உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள்.